1987 மார்ச் 3]

பெரியாறு-வைகை கால்வாயை நவீனப்படுத்துதல்.

40—(*வினா எண். 11250) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் நடைபெறும் பெரியாறு-வைகை கால்வாயை நவீனப்படுத்தும் பணி எப்போது நிறைவு பெறும்?

(ஆ) இதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பெரியாறு-வைகை பாசன மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 1988 ஏப்ரல் திங்களில் நிறைவு பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) முதற் கட்டப் பணிகள் ரூ. 46.40 கோடி செலவில் 1984 டிசம்பர் திங்களில் முடிவடைந்தது. இத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், ரூ. 56.86 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அறிக்கையினை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன் :

'' இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, 1977–78-ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கையில் (சிவில்) சில துறைகள் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள்

டாக்டர் சே சபரசப் [1987 மார்ச் 3

குழுவின் (1983–84) முப்பத்தி நான்காவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற் கொண்டு எடுத்த நடவடிக்கை குறித்த மேற்படி குழுவின் முப்பத்தொன் பதாவது அறிக்கை''.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்-விவாதம்—தொடர்ச்சி.

*திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல நான் விரும்புகிறேன். மதுவிலக்கைப் பொறுத்தவரை, தமிழகத்தில் எந்தத் தலைவரை விடவும், எந்தக் கட்சியை விடவும் புரட்சித் தலைவரின் தலைமையிலே இயங்கி வருகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்கள். குடியாலே ஒரு குடும்பம் கெட்டது என்ற அவப் பெயர் நமக்கு வந்துவிடக் கூடாது என்கிற அச்ச உணர்வின் காரணமாகவே மதுக் கடைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் சில கால கட்டங்களில் மிகுந்த நம்பிக்கையோடு இந்த அரசு செயல்பட்டு வந்தது என்பதை நான் இந்த மன்றத்திலே நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவரின் நீண்ட காலக் கனவு இந்த ஆண்டு தொடக்க முதல் நிறைவேறி இருக்கிறது என்பதை இந்த நாடு அறியும். ஏறத்தாழ 250 கோடி ரூபாய் வரி இழப்பு ஏற்பட்டிருந்தாலும் கூட தமிழகத்திலே புரட்சித் தலைவர் கூறிய கூற்றுப்படி இன்றைக்கு சாராயக் கடைகள் மூடப்பட்டு விட்டன. தமிழகத்திலே இருக்கிற பொது மக்களின் சார்பாகவும், தாய்க்குலத்தின் சார்பாகவும், எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கள்ளுக் கடைகள் மூடப்பட்டதன் காரணமாக ஏறத்தாழ 30 ஆயிரம் தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலை இழந்திருக்கிறார்கள். தொழிலை இழந்த காரணத்தால் அவர்களுக்கு வருமான இழப்பு ஏற்படும் என்று கருதி அவர்களுக்குப் பதநீர் இறக்குதல், பனை வெல்லம் தயாரித்தல் போன்ற தொழில்களை நடத்திக் கொள்வதற்காக அரசால் 2 ஆயிரம் ரூபாய் ரொக்க உதவி அளிக்கப்படும் என்ற உன்னதமான திட்டம், இன்றைக்குப் பலநோக்குப் பார்வையோடு பார்க்கக் கூடிய ஒன்றாகும்.